සියලු ම හිමිකම් ඇවිරිණි/All Right Reserved / முழுப் பதிப்புரிமையுடையது

# ශ්‍රී ලංකා සංවර්ධන පරිපාලන ආයතනය
# இலங்கை அபிவிருத்தி நிருவாக நிறுவகம்
# SRI LANKA INSTITUTE OF DEVELOPMENT ADMINISTRATION

## இலங்கை நிர்வாக சேவை உத்தியோகத்தர்களுக்கான முதலாவது வினைத்திறன்காண் தடைதாண்டல் பரீட்சை 2020(I)

காலம் 03 மணித்தியாலங்கள்

**அரச துறையில் நிதி முகாமைத்துவம் மற்றும் பெறுகை நடைமுறை - 04**

විභාග අංකය
Index No / சுட்டெண் ......................................

- **ஐந்து (05) வினாக்களுக்கு மாத்திரம் விடை தருக.**

---

01. i. இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் ஏற்பாடுகளில் மற்றும் நிதி ஒழுங்கு விதிகளில் உள்ளடக்கப்பட்டுள்ளவாறு அரச நிதி முகாமைத்துவம் தொடர்பில் பாராளுமன்றத்தின் கட்டுப்பாடு செயற்படுத்தப்படும் முறையை ஏற்புடைய சட்ட ஏற்பாடுகளுடன் விபரிக்க. (15 புள்ளிகள்)

    ii. ஏதேனுமொரு வருடத்தின் ஒதுக்கீட்டுச் சட்டமூலம் பாராளுமன்றத்தில் நிறைவேற்றப்படுவதற்கு முன்னர் பாராளுமன்றம் கலைக்கப்படுமிடத்து அரச சேவைகள் மற்றும் தேர்தலுக்காக நிதியைப் பெற்றுக்கொள்ளும் முறையை உரிய சட்ட ஏற்பாடுகளுடன் விளக்குக. (05 புள்ளிகள்)

02. i. தேசிய திட்டமிடல் திணைக்களத்தின் வகைப்பாடுக்கும் இல. MNPEA/PLN/PL/2019 மற்றும் 2019.01.10 ஆம் திகதிய சுற்றறிக்கையில் செய்யப்பட்டுள்ள வகைப்பாட்டுக்கும் அமைய பிரதான செயற்திட்ட வகைகள் ஐந்தைக் (05) குறிப்பிடுக. (05 புள்ளிகள்)

    ii. நிதி ஒழுங்கு விதி 03 இல் குறிப்பிடப்பட்டுள்ள படி கருத்திட்டங்களை திட்டமிடும் கட்டங்களைக் குறிப்பிடுக. (10 புள்ளிகள்)

    iii. அதிகரிப்பு முறையிலான பாதீட்டுக்கும் (Incremental Budgeting) பூச்சிய அடிப்படையிலான பாதீட்டுக்கும் (Zero-based Budgeting) இடையில் காணப்படும் வித்தியாசங்கள் இரண்டை (02) விளக்குக. (05 புள்ளிகள்)

03. i. நிதி ஒழுங்கு விதி 135 இன் கீழ் நிதிக் கட்டுப்பாட்டுக்காக கடமைகளைக் கையளிக்கும் போது கணக்கீட்டு உத்தியோகத்தர்களினால் தனக்கு கீழுள்ள உத்தியோகத்தர்களுக்கு கொடுக்கல் வாங்கல்கள் தொடர்பில் கையளிக்கப்படும் கடமைகளைக் குறிப்பிடுக. (07 புள்ளிகள்)

ii. நிதி ஒழுங்கு விதி "அங்கீகாரமளித்தல்" இன் கீழ் ஏதேனும் செலவினத்திற்கு அங்கீகாரமளிக்கும் உத்தியோகத்தரின் பொறுப்புக்கள் நான்கினைக் (04) குறிப்பிடுக. (08 புள்ளிகள்)

iii. நிதி ஒழுங்கு விதி 143(2) இன் கீழ் வருமானம் சேகரிக்கும் உத்தியோகத்தரின் பொறுப்புக்கள் ஐந்தைக் (05) குறிப்பிடுக. (05 புள்ளிகள்)

04. i. நிதி ஒழுங்கு விதி 126 பிரகாரம் திறைசேரியின் பிரதான கடமை, அரச நிதிக் கட்டுப்பாட்டையும் மேற்பார்வையையும் பேணிவருவதாகும். திறைசேரியின் இந்தக் கட்டுப்பாடு மற்றும் மேற்பார்வை கடமைக்குரிய செயற்பாடுகள் ஐந்தைக் (05) குறிப்பிடுக. (05 புள்ளிகள்)

ii. நிதி ஒழுங்கு விதி 128 பிரகாரம் கணக்கீட்டு உத்தியோகத்தர்களின் பொறுப்புக்கள் ஐந்தைக் (05) குறிப்பிடுக. (05 புள்ளிகள்)

iii. அரசாங்க கணக்குகள் பற்றிய குழு (COPA) மற்றும் அரசாங்க பொறுப்பு முயற்சிகள் பற்றிய குழு (COPE) தொடர்பில் சுருக்கமாக விபரிக்க. (10 புள்ளிகள்)

05. i. அரசாங்க பெறுகை வழிகாட்டு நெறிக் கோவைக்கு அமைய தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழுவொன்றின் கடமைகள் மற்றும் பணிகள் நான்கினைக் (04) குறிப்பிடுக. (08 புள்ளிகள்)

ii. பெறுகைச் செயன்முறையின் போது விலைமனுக்கள் திறக்கும் குழுவின் பணிகள் மற்றும் கடமைகள் மூன்றைக் (03) குறிப்பிடுக. (06 புள்ளிகள்)

iii. பெறுகைச் செயன்முறையின் போது பயன்படுத்தப்படும் பிணையங்கள் மூன்று (03) வகையை விளக்குக. (06 புள்ளிகள்)

06. பின்வரும் விடயங்கள் தொடர்பில் சிறு குறிப்பு எழுதுக.

i. வங்கிக் கணக்கிணக்கக் கூற்று

ii. வருடாந்த பொருள் சுற்றாய்வு

iii. நட்டங்கள், சேதங்கள் பற்றிய முழுமையான அறிக்கையொன்றில் உள்ளடக்கப்பட வேண்டிய விடயங்கள்

iv. ஈட்டுறுதிப் பிணைமுறி

(புள்ளிகள் 5 x 4 = 20)

*************